நான்கு கேள்விகளில் ஒன்று 28 ஆம் தேதி நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட இருக்கிறது. மற்ற மூன்றின் விஷயத்தில் விசாரித்தபோது, சம்பந்தப்பட்ட இலாகா மேலும் கொஞ்சம் அவகாசம் கேட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. சிக்கிரம் கொடுத்தாக வேண்டுமென்று அவர்களுக்குத் தகவல் அனுப்பப் பட்டிருக்கிறது. அவையின் சார்பாக அமைச்சர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில வினாக்களைக் கவனித்துப் பார்த்தேன். நீண்ட அவகாசம் தேவையில்லாதவையாக இருந்தும் கூட, ஏன் அவ்வளவு அவகாசம் இலாகாவினால் எடுக்கப்படுகிறது என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. நான் நேரடியாக இலாகாவினரை துரிதப்படுத்த முடியாது. சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் சுற்றறிக்கை அந்தந்த இலாகாக்களுக்கு அனுப்பி வினாக்களுக்கு சீக்கிரமாக விடை அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

3. **மேலவை விதி 82ன் கீழ் விளக்க உரை தலைமை அரசு அச்சகத்தில் விபத்துக்கள் விகிதத்தைக் குறைத்ததற்காக தேசீய பாதுகாப்பு விருது அளிக்கப்பட்டிருப்பது குறித்து.**

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இப்போது மாண்புமிகு அரிஜன நல அமைச்சர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் அவர்கள் அவைக்கு ஒரு அறிவிப்பை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: துணைத் தலைவர் அவர்களே, தலைமை அரசு அச்சகத்தில் விபத்துக்கள் நேரிடும் விகிதத்தைக் குறைக்க எடுத்துக் கொண்ட சீரிய பணியைப் பாராட்டி தேசிய பாதுகாப்பு விருது அளிக்கப்பட்டிருக்கிறது.

உடல் ஊனமுற்றோரை அதிக அளவில் பணியில் அமர்த்தியுள்ள நிறுவனங் களிலேயே, இந்தியாவில் முதலிடம் வகிக்கும் நிறுவனம், சென்னையிலுள்ள அரசு அச்சகம்தான், என்பதற்காகக் குடியரசுத் தலைவர் விருது கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த அச்சகத்தில் பணிபுரியும் 3,527 பணியாளர்களில் 106 பேர் உடல் ஊனமுற்றோர் என்பது குறிப்பிடத் தக்கது.

இரு விருதுகளும் கிடைக்கின்ற வாய்ப்பு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்கும் தமிழக அரசு நடத்தும் அச்சகத் திற்குக் கிடைத்திருக்கிறது என்கிற மகிழ்ச்சிகரமான செய்தியை இந்த அவைக்கும் நாட்டுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.